**தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் பகுதி I - 2017**

தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி I இன் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 திசெம்பர் 23 ஆந் திகதிய பீபிசீ இலக்கம் (2014) 27 மொத்த இலக்கம் 321 மற்றும் 2015 திசெம்பர் 11 ஆந் திகதிய பீபிசீ இலக்கம் (2014) 27 மொத்த இலக்கம் 321A(1) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் கீழ் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. அம்பாந்தோட்டை மைய அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கு பங்களித்தல் மற்றும் வசதியளித்தலிற்கான வீதி வலையமைப்பை விருத்தி செய்தல் செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் பகுதி 01 இன் கீழான மாத்தறை தொடக்கம் பெலியட்ட இலிருந்தான தெற்கு அதிவேகப்பாதையின் 30 கிலோமீற்றர் இனை நீடிப்பதற்காக மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 103,280 மில்லியனாக உள்ளதுடன், அதில் ரூபா 87,788 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 683.49 மில்லியனை சிவில் மற்றும் ஆலோசனை சேவைக்காக நிதியளிப்புச் செய்வதற்கு சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி இணங்கியிருந்தது. செயற்திட்டத்தின் பகுதி I இன் கீழான அதிவெகப்பாதையின் நிர்மான வேலைகள் 2016 சனவரி 19 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 ஜூலை 18 யூன் மாதமளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான்

நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப்பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் உதவி வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடனிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த விதந்துரைப்புக்களின் பிரகாரம் கடனின் கீழான மீளப்பெறுகைகள் காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் செயற்திட்ட நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்ட அமுலாக்கலிற்காக பின்பற்றப்பட்ட வகைப்படுத்தல்களிற்கு இணங்கும் வகையில் செலவினங்கள் சரியாக இனங்கண்டு கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும், ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து இதுவரை தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதிகள் ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையிலான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | 2017 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | |
|---|---|---|---|---|---|
| | | | | 2017ம் ஆண்டின் போது | 2017 திசெம்பர் 31 வரை |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| சீனா ஏற்றுமதி இறக்குமதி வங்கி-சிவில் வேலைகள் | 683.49 | 87,788.00 | 22,865.00 | 22,864.51 | 46,665.71 |
| ஜீஓஎஸ்எல் | 120.62 | 15,492.00 | 3,690.43 | 3,156.79 | 12,407.15 |
| ஜீஓஎஸ்எல் (காணி) | | | 1,465.48 | 1,465.49 | 1,972.63 |
| மொத்தம் | 804.11 | 103,280.00 | 28,020.91 | 27,486.79 | 61,045.49 |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

பௌதீக செயலாற்றல் 47.72 சதவீதத்தை அடைய வேண்டிய செயற்திட்டத்தின் பகுதி - I இன் கீழான மாத்தறை தொடக்கம் பெல்லட்ட வரையான தெற்கு அதிவேகப் பாதையின் 30 கிலோமீற்றர்களின் நீடிப்பின் நிர்மாண வேவைகளின் ஒட்டுமொத்த பௌதீக செயலாற்றல் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 51.67 சதவீதத்தினை அடைந்திருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 இல் தயாரிக்கப்பட்ட அதிவேகப் பாதையின் கட்டமைப்பு வேலைகளிற்கான ஆரம்ப வரைபடங்கள் இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் தேவைப்பாடுகளை நிறைவு செய்ய 2017 இல் அதன்மீது பெறப்பட்டிருந்தது. எனவே, அதிவேகப் பாதையின் 21 சுரங்கப்பாதைகளின் வடிவமைப்புக்கள் 28 சுரங்கப்பாதைகள் வரை அதிகரித்திருந்தது. மேலும், 17 பாலங்கள் மற்றும் 84 மதகுகளின் (Culverts) வடிவமைப்புக்கள் 06 பாலங்கள் மற்றும் 69 மதகுகள் மாத்திரமே நிர்மாணிப்பதற்கு குறைக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தினால் புணர்நிர்மாணம் செய்வதற்கான 70 உள்ளூர் வீதிகளின் 30 கிலோமீற்றர்களின் நிர்மாண வேலைகளிற்கான அளவைப் பட்டியல்கள் வேறாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அதிவேகப் பாதையின் நிர்மாணத்திற்கான விகிதங்கள் உள்ளூர் வீதிகளின் புணர்நிர்மாணத்திற்கு பயன்படுத்தப்பட்டிருந்தமை அதிவேகப் பாதையின் விகிதங்களை விட அதிகமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(இ) செயற்திட்டத்தின் ஒப்பந்ததாரர் வெளி நபர்களிற்கு சொந்தமான காணியிலுள்ள கழிவுகளை முறையான முறையில் அகற்றியிருந்ததுடன் காணியின் உரிமையாளர் குப்பைகளை அகற்றுவதன் மீது ஏற்பட்ட சேதங்கள் மீது ரூபா 08 மில்லியன் மேலதிகமாகப் பெற்றிருந்தார்.

**3.4 நிதிக் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்**

செயற்திட்டத்தின் இருப்பு உருப்படிகள் மீதான பொருட் கணக்கெடுப்பு நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் செய்யப்படல் வேண்டும். இருப்பினும், பொருட் கணக்கெடுப்பு உரிய சொத்துக்களின் பௌதீக இருப்பனவு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

செயற்திட்டத்தின் சிரேஸ்ட டோல் முறைமை வடிவமைப்பு மற்றும் நிறுவல் பொறியியலாளர், சிரேஸ்ட டோல் வசதிகள் வடிவமைப்பு மற்றும் நிறுவல் பொறியியலாளர் மற்றும் சிரேஸ்ட போக்குவரத்து வீதி பாதுகாப்பு பொறியியலாளர் போன்ற முக்கிய பதவிகள் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் தொடக்கத்திலிருந்து வெற்றிடமாக காணப்பட்டது.